
Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்






| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 94 | உள்ளூர் - 04.04.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 94 | வெளியூர் - 05.04.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



‘ஹம்ச மகா புருஷ ராஜயயோகம்’.. 12 ராசிகளுக்கான பலன்!

ITI முடித்தவர்களுக்கு கடற்படையில் வேலை..!

பி.எப். ஊழியர்களுக்கு ஜாக்பாட்!

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

## பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ.க. மைய குழு கூட்டம்!



புதுச்சேரி, ஏப். 04–

புதுச்சேரி சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற 9–ந்தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் பா.ஜ.க., என்.ஆர்.காங்கிரஸ், அ.தி.மு.க., லட்சிய ஜனநாயக கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. இந்த சூழலில் பிரதமர் மோடி நேற்று டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் சென்னை வந்தடைந்தார். பின்னர் அவர் சென்னை விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் புதுச்சேரி புறப்பட்டுச் சென்றார். பின்னர் அங்கு சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி ரோடு ஷோ மூலம் வாக்கு சேகரித்தார். பின்னர் பிரசாரத்தை முடித்துகொண்டு மீண்டும் நேற்றிரவு 7 மணியளவில் சென்னை திரும்பினார். கிண்டியில் உள்ள நட்சத்திர ஓட்டலுக்கு சென்று இரவு தங்கினார். அவரை அங்கு தமிழக பா.ஜ.க. நிர்வாகி எச்.ராஜா, மொடக்குறிச்சி எம்.எல்.ஏ. சரஸ்வதி உள்ளிட்டோர் சந்தித்தனர். இந்நிலையில் அந்த ஓட்டலில் பிரதமர் மோடி தலைமையில் தமிழக பா.ஜ.க. மைய குழு நிர்வாகிகள் கூட்டம் இன்று காலை 11 மணியளவில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளரான மத்திய மந்திரி பியூஸ் கோயல், மேலிட பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, தேசிய செயலாளர் அரவிந்த் மேனன், தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், நிர்வாகிகளான மத்திய இணை மந்திரி எல்.முருகன், பொன் ராதாகிருஷ்ணன், டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், அண்ணாமலை, வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர். இதில் பங்கேற்பதற்காக அண்ணாமலை கேரளா பிரசாரத்தில் இருந்து அவசரமாக சென்னை திரும்பினார். இந்த கூட்டத்தில் தமிழக சட்டமன்ற தேர்தலில் கடந்த முறையை விட அதிக இடங்களில் வெற்றிபெற வேண்டும் என்று நிர்வாகிகளை பிரதமர் மோடி ஊக்கப்படுத்துவார் என்று கூறப்படுகிறது. இந்த ஆலோசனை கூட்டம் மதியம் 12 மணி வரை நடைபெறுகிறது. அதன்பின்னர் அவர் மதியம் 1 மணி வரை ஓட்டலில் இருக்கிறார்.

இந்த நேரத்தில் அவரை கூட்டணி கட்சி தலைவர்கள் சந்தித்து பேசுவதற்கு வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

மேலும் சென்னையில் உள்ள 16 தொகுதிகளில் போட்டி யிடும் வேட்பாளர்கள் சந்தித்து வாழ்த்து பெற இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

பிரதமர் மோடி ஏற்கனவே தமிழ்நாட்டில் 3 முறை (செங்கல்பட்டு, மதுரை, திருச்சி) தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளதால் இந்த முறை நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துவதற்கு மட்டும் அவருடைய பயண திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. அவருடைய பயண திட்டத்தில் ‘ரோடு ஷோ’ இடம் பெறவில்லை என தகவல்கள் தெரியவந்துள்ளன.

## “இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம்” என்ற போர்வையில்..! - முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் விமர்சனம்!!



சென்னை, ஏப். 04–

தமிழ்நாடு முதல்– அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:–

தேசியக் கல்விக் கொள்கை 2020–ஐச் சார்ந்து, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம் என்பது சாதா ரண கல்விச் சீர்திருத்தம் அல்ல; அது மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் வகையிலா ன, நன்கு திட்டமிடப்பட்ட ஆழ்ந்த கவலைக்குரிய முயற்சியாகும். “இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம்” என்ற போர்வையில், இந்தியாவின் செழுமையான மற்றும் பன்மைத்துவம் நிறைந்த மொழிப் பாரம்பரியத்தைத் திட்டமிட்டு ஒதுக்கி, இந்திக்கு முன்னுரிமை அளித்து மையப்படுத்தும் செயலை அரசியல் நோக்கத்துடன் பா.ஜ.க. தலைமையிலான NDA அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. “மும்மொழிக் கொள்கை” என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியா கும். தென் மாநில மாணவர்களைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம், கட்டாய இந்தி என்பதைக் கடந்து வேறேதுமில்லை. இருப்பினும், இதில் ஒருவருக்கொருவர் இடையிலான பரிமாற்றம் எங்கே இருக்கிறது? இந்தி பேசும் மாநிலங்களை சேர்ந்த மாணவர்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் அல்லது வங்கம், மராத்தி உள்ளிட்ட மொழிகளை கட்டாயமாக படிப்பார்களா? இதுகுறித்த தெளிவின்மை, இதிலுள்ள ஒருசா ர்பையும் – பாகு பாட்டையும் வெளிப்படு த்துகிறது. இந்த முரண் வெளிப்படை யானது, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கேந்திரிய வித்யாலயா பள்ளி களில் தமிழை கட்டாயமாக்க முடி யாத – தொட ர்ச்சியாக போதிய தமிழாசிரியர்களை நியமிக்க தவறிய இதே மத்திய அரசு, இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம் என்று மாநிலங்களுக்குப் பாடம் எடுக்க நினைக்கிறது. இது பொறுப்புணர்வல்ல; கபட நாடகத்தின் உச்சம்!

ஆசிரியர்களின் எண்ணிக்கை, போதிய பயிற்சிக்கான திறன் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவை குறித்த உண்மை களநிலவரத்தை மத்திய அரசு உணர்ந்திருக்கிறதா? இந்த செயல்திட்டத்தை அமல்படுத்த தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் எங்கே இருக்கிறார்கள்? கல்வி துறையில் மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தும் இந்த நகர்வுக்கான நிதி ஆதாரம் எங்குள்ளது? எவ்வித திட்டமிடலும், வளங்களும், பொறுப்பும் இல்லாத உள்நோக்கம் கொண்ட மற்றுமோர் திட்டமாகவே இது தோன்றுகிறது. இது மொழி குறித்த கேள்வி மட்டுமல்ல; நியாயம், கூட்டாட்சி மற்றும் சமவாய்ப்புகள் குறித்த கேள்விகளு மாகும். இந்தி பேசும் மாணவர்களைக் கட்ட மைப்புரீதியான சலுகைகளை அளித்து, உயர்கல்வி மற்றும் வேலைவா ய்ப்புகளில் அவர்களுக்கு ஆதாயம் ஏற்படுத்துவதோடு, மாநிலங்களு க்கிடையே மேலும் ஏற்றத்தாழ்வுகளையே இது உண்டாக்கும். முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முன்னோக்கி நகரும் வேளையில், நம் குழந்தைகள் எதிர்காலத்திற்காகத் தயாராக இருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு, அனிமேஷன் – விஷுவல் எபக்ட்ஸ் – கேமிங் – காமிக்ஸ் உள்ளிட்ட துறைகளில் அவர்களது திறனை மேம்படுத்தி, அவர்க ளது அறிவியல் பார்வையை யும் திறனாய்வுச் சிந்தனையையும் ஊக்குவிக்க வேண்டும். மாறாக, இத்த கைய பிற்போக்குத்தனமான, இறுக்கமான மொழிச் சுமை அவர்களது முன்னேற்ற த்தைத் தடுப்பதாக உள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் தொடர்ச்சியாக எழுப்பிய நியாயமான – ஜனநாயகப்பூர்வமான கவலைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்தியை திணிப்பதில் மத்திய அரசு மும்முரமாக இருப்பது தெரிகிறது. இந்த செயல், கூட்டுறவு கூட்டாட்சியி யலுக்கு எதிரானது, கோடிக்க ணக்கான இந்தியர்களின் மொழி அடையாளங்களை நேரடியாக அவமதிக்கும் செயல்.

இந்தியாவின் வலிமை என்பது, பன்முகத்தன்மை யில்தான் இருக்கிறதே தவிர, திணிக்கப்படும் ஒற்றைத்தன்மை யில் இல்லை. இந்த சமநிலையை குலைக்கும் எத்தகைய முயற்சிகளும் தவறானவை மட்டுமல்ல, ஆபத்தானது மாகும். நம் நாட்டின் அடிப்ப டையான பன்மைத்து வத்தையே தாக்கும் இத்தகைய கொள்கைகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியவையாகும். பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க.வும், அதன் NDA கூட்டணி கட்சிகளும் இந்த திணிப்பை ஏற்றுக்கொள்கி ன்றனரா..? அல்லது நமது மாணவர்களின் எதிர்காலம், அடையாளம் மற்றும் உரிமைகளுக்காக ஒரே ஒரு முறையாவது முதுகெலும்போடு எதிர்ப்பார்களா.? இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுச்சேரியில் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்த இரு சக்கர வாகன ஓட்டிகளால் பல இடங்களில் விபத்து!



புதுச்சேரி, ஏப். 04–

புதுச்சேரியில் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்த இரு சக்கர வாகன ஓட்டிகள் மீது போலீசார் தடியடி நடத்தினர். விஜய் வாகனத்தின் மேல் ஏறிய இளைஞர்களை புதுச்சேரி போலீசார் விரட்டி அடித்தனர். மரக்காணத்தில் விஜய் கார் மீது இளைஞர்கள் ஏறியதால் பிரச்சார வாகனத்துக்கு விஜய் மாறினார். பிரச்சார வாகனத்திலும் இளைஞர்கள் அத்துமீறி ஏறியதால் போலீசார் லேசான தடியடி நடத்தினர். விஜய் வாகனத்தை தொடர்ந்தும் எதிர் திசையிலும் ஏராளமான இளைஞர்கள் பைக்கில் சென்றதால் சில இடங்களில் விபத்து ஏற்பட்டுள்ளது.

## மீண்டும் டிரம்ப் ஆடுபுலி ஆட்டம்?

# வர்த்தகப் போர் மூலம் மீண்டும் விஸ்வரூபம் மருந்து நிறுவனங்களுக்கு செக்..!

## உலோக இறக்குமதிக்கும் லாக்..!!





அமெரிக்கா, ஏப். 04–

களத்தில் டிரம்ப்பின் ஒவ்வொரு அறிவிப்பும் சர்வதேச நிறுவனங்களை ஆட்டம் காண வைத்து வருகிறது. ஒரு பக்கம் உயிர்காக்கும் மருந்து நிறுவனங்களுக்கு 100% வரி விதிப்பு மூலம் செக் வைத்த கையோடு, மறுபக்கம் உலோக இறக்குமதி விதிகளில் லாக் போட்டு சர்வதேச சந்தையையே அதிர வைத்திருக்கிறார். ஏற்கனவே ஈரான் போர் மூலம் எரிசக்தி சந்தையில் ஆட்டத்தை ஆடி வரும் அமெரிக்கா, தற்போது வர்த்தகப் போர் மூலம் மீண்டும் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது.

ஈரான் – அமெரிக்கா இடையிலான பதற்றம் மத்தியில் சில வாரங்களாகவே வரி போர் குறித்து அமைதி காட்டி வந்த டிரம்ப், தற்போது மீண்டும் ஆட்டத்தை ஆட ஆரம்பித்துள்ளார். அமெரிக்க பொருளாதாரத்தை பலப்படுத்த டிரம்ப் ஆடும் சாமர்த்தியமான ஆடுபுலி ஆட்டமா இது? உலக நாடுகளின் புருவங்களை உயர செய்துள்ள இந்த அதிரடி நகர்வுகளின் பின்னணியையும், அதன் தாக்கத்தையும் விரிவாக பார்ப்போம். அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தனது மிகவும் விருப்பமான தேசம் (Most Favored Nation) என்ற விலை நிர்ணய திட்டத்தில் இணையாத மருந்து நிறுவனங்களை குறிவைத்து, ஒரு விரிவான வரி திட்டத்தை வெளியிட்டுள்ளார். இத்துடன் உலோக இறக்குமதி வரிகளிலும் புதிய மாற்றங்களை கொண்டு வந்துள்ளார். இந்த புதிய கொள்கையின்படி, இறக்குமதி செய்யப்படும் சில காப்புரிமை பெற்ற மருந்துகள் மற்றும் அவற்றின் முக்கிய மூலப்பொருட்கள் மீது 100% வரி விதிக்கப்படுகிறது. இது மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் தங்களது உற்பத்தியை அமெரிக்காவிற்கு மாற்றவும், அங்கிருந்து உற்பத்தி செய்து அமெரிக்க நுகர்வோருக்கு நேரடியாக குறைந்த விலையில் மருந்துகளை வழங்கவும் கட்டாயப்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகவும் பார்க்கப்படுகிறது.

இதில் கவலையளிக்கும் மற்றொரு விஷயம் என்னவெனில் பெரிய மருந்து நிறுவனங்கள் இந்த விதிகளுக்கு இணங்க 120 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதே சிறிய நிறுவனங்களுக்கு 180 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த காலக்கெடுவிற்கு பிறகு, அதாவது இந்த கோடைகாலத்தின் பிற்பகுதியில் இந்த வரி விதிப்பு அமலுக்கு வரும். இது குறித்து முக்கிய அதிகாரிகள் உள்நாட்டு உற்பத்தியை விரைவுபடுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்று கூறுகின்றனர். ஏற்கனவே இது குறித்து பல எச்சரிக்கை விடுத்தாயிற்று. ஆக இதை விரைவில் அமலுக்கு கொண்டு வருவோம் என்றும் தெரிவித்துள்ளார். எனினும் உற்பத்தியாளர்களை ஈர்க்க இந்த வரி அறிவிப்பில் வரி விலக்குகளும் இடம் பெற்றுள்ளன. அதாவது விலை நிர்ணய திட்டத்தில் இணைபவர்களுக்கு அல்லது அமெரிக்காவில் உற்பத்தி செய்பவர்களுக்கு வரி குறைப்பு இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டு ள்ளது. குறிப்பாக அமெரிக்காவில் உற்பத்தி செய்பவர்களுக்கு 20% வரி குறைப்பு இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், தென் கொரியா மற்றும் சுவிட்சர்லாந்து உள்ளிட்ட ஏற்கனவே வர்த்தக ஒப்பந்தம் வைத்துள்ள பகுதிகளில் உள்ள நிறுவன ங்களுக்கு சுமார் 15% குறைந்தபட்ச வரியும், இங்கிலாந்து சார்ந்த நிறுவ னங்களுக்கு சுமார் 10% வரியும் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு ள்ளது. இத்துடன் அலுமினியம், காப்பர், இரும்பு போன்ற உலோகங்களின் இறக்குமதி வரிகளை மாற்றியமைக்கும் உத்தரவிலும் டிரம்ப் கையெழுத்திட்டு ள்ளார். அத்துடன் வீட்டு உபயோகப் பொருட்கள் அல்லது அதிக உலோகம் கொண்ட இயந்திரங்களை இந்தியா ஏற்றுமதி செய்தால், அவற்றுக்கும் 25% வரி விதிக்கப்படும்.

இந்தியா சர்வதேச அளவில் ஜெனரிக் மருந்துகளின் மிகப்பெரிய ஏற்றுமதியாளராகவும், அமெரிக்காவுக்கு மருந்து சப்ளை செய்யும் முக்கிய நாடாகவும் இருக்கிறது. தற்போதைய சூழலில் இந்தியாவுக்கு, அமெரிக்காவு டன் எந்த நேரடி விலை நிர்ணய ஒப்பந்தமும் இல்லை. ஆக அமெரிக்காவுக்கு மருந்து மற்றும் மருந்து மூலப்பொருட்கள் ஏற்றுமதி செய்யும் இந்திய நிறுவனங்கள் 100% வரி வளையத்திற்குள் வரலாம். இதேபோன்று இந்தியாவிடமிருந்து ஸ்டீல் மற்றும் அலுமினியம் ஆகியவற்றை அமெரிக்கா இறக்குமதி செய்கிறது. இவற்றிற்கு அமெரிக்க கொள்முதல் விலை அடிப்படையில் வரி கணக்கிடும் என்பதால் வரி சுமை அதிகரிக்கவும் வாய்ப்புண்டு. இதன் எதிரொலியாக மருந்து மற்றும் உலோகங்கள் சார்ந்த பங்குகளிலும் வரும் திங்கட்கிழமை அன்று சந்தையிலும் எதிரொலிக்கலாம்.

## ரஷியா, சீனா எதிர்ப்பு..ஹார்முஸ் நீரிணை தாக்குதல் தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தோல்வி!



வாஷிங்டன், ஏப். 04–

வளைகுடா நாடுகளில் போர்ப் பதற்றம் தொடர்ந்து நீடித்து வருகிறது. இதற்கிடையே ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியது மட்டுமின்றி சவுதி அரேபியா, கத்தார், பஹ்ரைன், ஜோர்டான், ஐக்கிய அரபு அமீ ரகம், ஓமன் உள்ளிட்ட வளைகுடா நாடுகளை குறிவைத்து ஈரான் சரமாரி தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால் அந்த நாட்டில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், கச்சா எண்ணெய் கிணறுகளை வளைகுடா நாடுகள் மூடின. இதனால் வளை குடா நாடுகளுக்கு பெரும் பொரு ளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் வீட்டோ அதிகாரம் கொண்ட 5 நிரந்தர உறுப்பினர்களுடன் 10 தற்காலிக உறுப்பினர்கள் என 15 உறுப்பினர்கள் கொண்ட அமைப்பாக உள்ளது. ஏப்ரல் மாதத்தின் தற்காலிக தலைமைத்துவத்தை பஹ்ரைன் ஏற்றுள்ளது. இதனை தொடர்ந்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஈரான் மீது தாக்குதல் நடத்தி போர்ப் பதற்றத்தை முடிவுக்கு கொண்டு மீண்டும் ஹார்முஸ் நீரிணை திறக்கும் வகையில் பஹ்ரைன் தீர்மானம் கொண்டு வந்தது. இதற்கு மற்ற நாடுகளும் ஒன்றிணைய வேண்டும் என தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதற்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்களான சீனா, ரஷியா எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து தீர்மானம் தோல்வியில் முடிந்தது.

தற்காப்பு நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்ள அனுமதிக்கும் வகையில் தீர்மானம் மாற்றப்பட்டுள்ளது. இதற்கான வாக்கெடுப்பு இன்று (சனிக்கிழமை) நடைபெறுகிறது.



மதுரை மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணியில் புதிய நீதி கட்சி சார்பில் திரைப்பட இயக்குனரும், நடிகருமான சுந்தர்சி இன்று வேட்பு மனு தாக்கல் செய்தார்.உடன் அவரின் மனைவி நடிகை குஷ்ப, ஏ.சி.சண்முகம் ஆகியோர் இருந்தனர்.

தலையங்கம் மதுரை மணி
சனிக்கிழமை 04.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 21-ம் தேதி

# ஈரான் போரால் நடக்கும் ஒரே நன்மை..!!




ஈரான் போர் நம் அன்றாட வாழ்க்கையில் பல தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. எல்பிஜி தட்டுப்பாடு, உணவு பொருட்கள் விலை உயர்வு, டீ, காஃபி விலை உயர்வு என மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். இந்த சிக்கல்களுக்கு மத்தியில் ஒரே ஆறுதலாக இருப்பது தங்கம் விலை சரிவு தான்.

ஈரான் போர் தொடங்கியது மார்ச் 28ஆம் தேதி. வழக்கமாக போர் நடந்தால் தங்கம் விலை உயரும் ஆனால் இந்த முறை விலை சரிந்துள்ளது. மார்ச் முழுவதுமே தங்கம், வெள்ளி விலை பெரிய அளவில் சரிவடைந்தது. ஏப்ரல் மாதமும் இதே நிலை நீடிக்குமா என நகை பிரியர்கள் காத்திருந்தனர். ஆனால் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் தங்கம் விலை குறைய தொடங்கியுள்ளது. அந்த வகையில் ஏப்ரல் மாதமும் தங்க நகை வாங்குவதற்கு சிறப்பான ஒரு மாதமாகவே இருப்பது போல தோன்றுகிறது. ஏனெனில் ஈரான் போர் தீவிரமடைய தீவிரமடைய தங்கம் மற்றும் வெள்ளி விலை குறையும். போர் காரணமாக கச்சா எண்ணெயின் விலை அதிகரித்திருப்பதால் சர்வதேச முதலீட்டாளர்கள் தங்களுடைய பணத்தை கச்சா எண்ணெயிலும் அமெரிக்க டாலரிலும் முதலீடு செய்கின்றனர். இதனால் தங்கம், வெள்ளியில் முதலீடு குறைந்து டிமாண்ட் குறைந்த அவற்றின் விலை குறைகிறது. அமெரிக்க அதிபர் டிரம்ப் ஈரான் மீது அடுத்த இரண்டு மூன்று வாரங்களுக்கு தீவிர தாக்குதல் நடத்துவதாக தெரிவித்திருக்கிறார்.

இப்படி செஞ்சா குறைஞ்ச விலைக்கு தங்கம் கிடைக்கும் அதேபோல ஈரானும் எதிரிகள் சரணடையும் வரை போரிடுவோம் என கூறியிருக்கிறது. எனவே அடுத்த சில வாரங்களுக்கு போர் முடிவுக்கு வருவதற்கான வாய்ப்பு இல்லை என்பது இதன் மூலம் தெளிவாகிவிட்டது. இதனால் உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்திருக்கிறது. கச்சா எண்ணெய் விலை உயர்ந்திருப்பதால் தங்கம் விலை சரிவடைந்து இருக்கிறது. அந்த வகையில் ஈரான் போர் தீவிரமடையும் பட்சத்தில் தங்கம் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க.வேட்பாளராக மகாராஜன் எம்.எல்.ஏ.மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார். அவருக்கு தி.மு.க.சின்னத்தில் வாக்களித்து மீண்டும் வெற்றிபெற செய்ய வேண்டும் என்று ஆண்டிபட்டி பேரூராட்சி 4வது வார்டில் உள்ள மயான சாலை, குமரபுரம், ஊர் காத்த மாரியம்மன், முத்துமாரியம்மன் கோவில் பகுதியில் வீடு, வீடாக சென்று பேரூர் செயலாளர் சரவணன், 4வதுவார்டு தி.மு.க.செயலாளர் அரிச்சந்திரன், மகளிர் அணி சத்யா, லாவண்யா, ஈஸ்வரி, கவுன்சிலர் சரவணகுமார், 18 வது வார்டு செயலாளர் கோவிந்தராஜ், முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம், பாதுஷா, சந்திரன், கண்ணன், முன்னாள் ராணுவ வீரர் அரிச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் கை பிரதிகள் கொடுத்து ஆதாவு திரட்டினர்.

# உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் சென்ற ரூ.53,000 பணம் பறிமுதல்!



ராமநாதபுரம், ஏப். 04–

தமிழக சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன. இதனையடுத்து, தேர்தல் பறக்கும் படையினர் மாவட்டம் முழுவதும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், ராமநாதபுரம் மாவட்டத்தை அடுத்த திருப்புல்லாணி சோதனைச் சாவடி அருகே அதிகாரிகள் நடத்திய வாகன சோதனையில், அந்த வழியாக சென்ற ஒரு காரை நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது, பெரிய பட்டிணத்தைச் சேர்ந்த செய்யது சாதிக் என்பவர் ஆவணங்கள் இன்றி எடுத்துச் சென்ற ரூ.53,000 பணம் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட பணம் ராமநாதபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமை இடத்து துணை தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தேர்தல் காலத்தில் ரூ.50,000–க்கு மேற்பட்ட பணத்தை எடுத்துச் செல்லும் பொதுமக்கள், அதற்கான உரிய ஆவணங்களை கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விதிமுறைகளை மீறினால் பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தேர்தல் விதிமுறைகளை கடைப்பிடித்து ஒத்துழைக்குமாறு மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# PF ஊழியர்களுக்கு ஜாக்பாட்! 10 ஆண்டு பணிக்கு பென்ஷன் உறுதி - மத்திய அரசின் புதிய விதி!!




EPFO : தனியார் துறை ஊழியர்கள் மற்றும் EPFO உறுப்பினர்களுக்கு ஒரு மிக முக்கியமான செய்தி வெளியாகியுள்ளது. 2026 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதி மக்களவையில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, ஊழியர்களின் ஒய்வூதியத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் தகுதி வரம்புகள் குறித்து விரிவான விளக்கங்களை அளித்து ள்ளார். அதில், புதிய விதிகள் யாருக்குப் பொருந்தும்? எவ்வளவு பென்ஷன் கிடைக்கும்? என தெளிவாக கூறப்பட்டுள்ளது. அது குறித்து இங்கே விரிவாக தெரிந்து கொள்ளுங்கள்.

### ஒய்வூதியம் பெற குறைந்தபட்ச தகுதி என்ன?

மத்திய அரசின் புதிய சமூக பாதுகாப்பு குறியீடு 2020 (CoSS) மற்றும் தற்போதைய ஊழியர் ஒய்வூதியத் திட்டம் 1995ன் படி, ஒரு ஊழியர் ஒய்வூதியம் பெறுவதற்கு இரண்டு மிக முக்கியமான நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும். முத்லாவது என்னவென்றால், ஊழியர் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பிஎப் பங்களிப்புடன் கூடிய சேவையை முடித்திருக்க வேண்டும். ஒய்வூதியப் பலன்களை முழுமையாகப் பெற 58 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

### 50 வயதிலேயே பென்ஷன் வாங்க முடியுமா?

ஒரு ஊழியர் 58 வயது வரை காத்திருக்க விரும்பவில்லை என்றால், 50 வயது முடிந்த உடனேயே முன்கூட்டிய ஒய்வூதியம் கோரலாம். ஆனால், இதில் ஒரு நிபந்தனை உள்ளது. 58 வயதுக்கு முன்னதாக நீங்கள் ஒய்வூதியம் பெறத் தொடங்கினால், ஒவ்வொரு ஆண்டிற்கும் 4 விழுக்காடு என்ற விகிதத்தில் ஒய்வூதியத் தொகை குறைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, நீங்கள் 55 வயதில் ஒய்வூதியம் கேட்டு விண்ணப்பித்தால், 58 வயதை விட 3 ஆண்டுகள் முன்னதாகப் பெறுவதால், உங்கள் பென்ஷன் தொகையில் 12 விழுக்காடு குறைக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்

### பென்சன் பணம் கணக்கீடு

ஒய்வூதிய நிதி என்பது ஊழியரின் கையில் இருந்து பிடிக்கப்படுவது அல்ல. உங்கள் அடிப்படை ஊதியத்தில் நிறுவனம் வழங்கும் 12 விழுக்காடு பங்களிப்பில், 8.33 விழுக்காடு ஒய்வூதிய நிதிக்கு செல்கிறது. ரூ. 15,000 வரை ஊதியம் பெறுபவர்களுக்கு மத்திய அரசு கூடுதலாக 1.16 விழுக்காடு பங்களிப்பை வழங்குகிறது. தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 1,000 பென்ஷன் வழங்கப்படுகிறது. இது தவிர விதவை, விதவர் ஒய்வூதியமாக ரூ. 1,000, குழந்தைகளுக்கு ரூ. 250 மற்றும் அநாதை குழந்தைகளுக்கு ரூ. 750 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### தனியார் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குப் பொருந்துமா?

20 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் இது பொருந்தும். பணியில் சேரும்போது யாருடைய அடிப்படை ஊதியம் ரூ. 15,000க்கும் குறைவாக இருக்கிறதோ, அவர்களுக்கு இந்தத் திட்டம் கட்டாயமாக்க ப்பட்டுள்ளது.

### முறைசாரா தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு

அரசு வெறும் அலுவலகப் பணியாளர்களை மட்டும் கருத்தில் கொள்ளாமல், கட்டிடத் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள் மற்றும் கிக் தொழிலாளர்கள் போன்ற முறைசாரா தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்குகிறது. இவர்களுக்காக eShram தளம் வழியாக ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களான PMJJBY, PMSBY, Ayush–man Bharat ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தியாவின் அனைத்துத் தரப்பு உழைப்பாளர்களுக்கும் முதியோர் காலத்தில் நிதிப் பாதுகாப்பு கிடைப்பதை அரசு உறுதி செய்கிறது.

# தங்க நகை கடன்: ஆர்பிஐ கொண்டு வந்துள்ள "7 நாட்கள்" விதி!!

புதுடெல்லி, ஏப். 04–

தங்க நகை கடன்களில் இந்திய ரிசர்வ் வங்கி மேஜர் மாற்றங்களை கொண்டு வந்திருக்கிறது. இந்த மாற்றங்களை தங்க நகை கடன் வாங்கி இருப்பார் தெரிந்து வைத்துக் கொள்வது கட்டாயம்.





இதன்படி தங்க நகை கடன் தொகைக்கு புதிய வரம்புகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. அதாவது 2.5 லட்சம் ரூபாய் வரை கடன் பெறக் கூடியவர்களுக்கு, அவர்கள் அடகு வைக்கக்கூடிய தங்கத்தின் மதிப்பில் அதிகபட்சம் 85 சதவீதம் வரை கடன் வழங்கலாம் என இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி தந்திருக்கிறது. இதனை loan to value ratio என அழைக்கிறார்கள். இது தான் நாம் வாங்கும் தங்க நகை கடன் தொகை அளவை முடிவு செய்கிறது.

அப்படி பார்க்கும்போது குறைந்தபட்ச கடன் தொகை வாங்குவோருக்கு குறைந்த அளவு தங்கத்திலேயே அதிக அளவு தொகை கடனாக கிடைக்கும். அதுவே நீங்கள் 2.5 லட்சத்திலிருந்து 5 லட்சம் ரூபாய் வரை கடன் பெறுகிறீர்கள் என்றால் நீங்கள் அடகு வைக்கக்கூடிய தங்கத்தின் மதிப்பில் 80 சதவீதம் வரை மட்டுமே கடன் கிடைக்கும். 5 லட்சம் ரூபாய்க்கு மேல் நீங்கள் கடன் வாங்குகிறீர்கள் என்றால் நீங்கள் அடகு வைக்கக்கூடிய தங்கத்தில் 75 சதவீதம் வரையிலான தொகை மட்டுமே கடனாக வழங்கப்படும். எனவே குறைந்த அளவு கடன் வாங்குவோருக்கு இந்த அறிவிப்பு சாதகமாக அமைந்துள்ளது. கடனை முழுமையாக செலுத்திய வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் அடமானமாக வைத்த நகையை பொதுவாக வங்கிகள் அன்றைய தினமே வழங்கி விடும். சில வங்கிகள் தாமதப்படு த்தலாம். அதற்கு இனி அபராதம் செலுத்த வேண்டும். நீங்கள் கடனை முழுமையாக செலுத்திய பிறகும் அடமானமாக வைத்த தங்கத்தை வங்கிகள் அதிகபட்சம் ஏழு நாட்களுக்குள் வாடிக்கையாளரிடம் திரும்ப வழங்கி விட வேண்டும். ஏழு நாட்கள் கழித்தும் உங்களுடைய நகை உங்கள் கைக்கு வந்து சேரவில்லை என்றால் தினசரி ஒரு குறிப்பிட்ட தொகையை வங்கியில் உங்களுக்கு அபராதமாக வழங்கும். இது ஒவ்வொரு நாளும் 5000 ரூபாய் என கணக்கிடப்பட்டு வாடிக்கையாளருக்கு வழங்கப்பட வேண்டும் என ரிசர்வ் வங்கி அறிவித்திருக்கிறது. எனவே ஒரு நாள் தாமதமானால் 5000 ரூபாய், 2 நாட்கள் என்றால் 10,000 ரூபாய், 7 நாட்கள் என்றால் 35000 ரூபாய் வங்கிகள் உங்களுக்கு அபராதமாக வழங்க வேண்டும் என ரிசர்வ் வங்கி கடிவாளம் போட்டுள்ளது.

மேலும் தங்க நகை கடன் வாங்கும் போது வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் வழங்கக்கூடிய கடன் ஒப்பந்தம் உள்ளூர் மொழியில் தான் இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடன் விதிமுறைகள் எளிய மக்களுக்கும் அவர்கள் புரிந்து கொள்ளும் மொழியில் விளக்கப்பட வேண்டும் என்பதே புதிய விதிமுறையின் சாராம்சம். எனவே நீங்கள் கடன் வாங்கும்போது அந்த ஒப்பந்தம் உள்ளூர் மொழியில் இல்லை ஆங்கிலத்தில் தருகிறார்கள் உங்களுக்கு புரியவில்லை என்றால் உள்ளூர் மொழியில் தரும்படி கேட்கலாம்.



தேனி மாவட்டம் போடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பழனிசெட்டிபட்டியில் தி.மு.க.தேர்தல் அலுவலகம் அமைக்க முகூர்த்த கால் ஊன்றும் நிகழ்ச்சி நடந்தது. போடி தொகுதிதி.மு.க.வேட்பாளர் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார். முன்னாள் எம்.பி.ரவீந்திரநாத், போடி ஒன்றிய செயலாளர் லட்சுமணன், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசிப் முன்னாள் எம்.எல்.ஏ.ஆர். டி.கணேசன், போடி நகர செயலாலர் புருஷோத்தமன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# 12 ஆண்டுக்குப் பிறகு குருவால் உருவாகும் 'ஹம்ச மகா புருஷ ராஜயோகம்'.. 12 ராசிகளுக்கான முழு ராசிப்பலன்

ஜோதிடத்தின்படி, கிரகங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ராசி மாற்றம் அடைந்து, சுப யோகங்களையும் 'ராஜ யோகங்களையும்' உருவாக்குகின்றன; இவற்றின் தாக்கம் மனிதர்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், தேசம் மற்றும் உலகம் முழுவதிலும் நேரடியாகப் பிரதிபலிக்கிறது. மேலும், இந்த கிரகங்களின் இடப்பெயர்வுகள் சிலருக்கு நற்பலன்களைத் தருவதாக அமைந்தாலும், வேறு சிலருக்கு அவை அசுபமான பலன்களைத் தரக்கூடும். எனவே ஜூன் 2–ஆம் தேதியன்று குரு கிரகம் தனது உச்ச ராசியான கடகத்தில் பிரவேசிக்க உள்ளது; இதன் விளைவாக 'ஹம்ச மகா புருஷ ராஜயோகத்தை' உருவாகப் போகிறது.

ஜோதிட சாஸ்திரத்தில், இந்த 'ராஜயோகம்' மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. மேலும், இது 'பஞ்சமகாபுருஷ யோகங்கள்' எனும் வகையின் கீழ் வருகிறது. ஜாதகத்தில் இந்த ராஜயோகத்தைக் கொண்டிருப்பவர், கவர்ச்சியான தோற்றத்துடனும், ஆன்மீக நாட்டத்துடனும், ஆழ்ந்த அறிவோடும் திகழ்வார் என்பது நம்பிக்கை. இத்தகையோர் நீதி தவறாதவர்களாகவும், கருணை மிக்கவர்களாகவும் விளங்குவதுடன், சமூகத்தில் மிகுந்த மதிப்பையும் மரியாதையையும் பெறுகின்றனர். இந்த ராசிக்காரர்கள் தங்கள் வாழ்வில் சாதகமான வாய்ப்புகளைப் பெறுகின்றனர்; அவற்றின் வாயிலாக உயர்ந்த பதவிகளையும், செல்வத்தையும், பௌதிக சுகபோகங்களையும் அடைகின்றனர். அத்துடன், இவர்களின் முடிவெடுக்கும் திறனும் மேம்படுகிறது.

இந்நிலையில் ஜூன் 2–ஆம் தேதியன்று குரு பகவான் தனது உச்ச வீடான கடக ராசியில் பிரவேசிக்கிறார். இதன் விளைவாக 'ஹம்ச மகா புருஷ ராஜயோகம்' உருவாகும். கடக ராசியில் குரு பகவான் உச்சம் பெற்று, மிகவும் மங்கலகரமான பலன்களை அளிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜோதிடத்தின்படி, ஒரு ஜாதகத்தில் குரு கிரகம் கேந்திர ஸ்தானங்களில் — குறிப்பாக லக்னம் (1–ஆம் இடம்), 4–ஆம் இடம், 7–ஆம் இடம் அல்லது 10–ஆம் இடத்தில் — அமைந்திருந்து, அதே வேளையில் தனது சொந்த ராசிகளிலோ (தனுசு அல்லது மீனம்) அல்லது தனது உச்ச ராசியிலோ (கடகம்) சஞ்சரிக்கும்போது, இந்த 'ராஜ யோகம்' (அரசனுக்குரிய யோகம்) உருவாகிறது. இத்தகைய சூழல்களிலேயே இந்த ராஜ யோகம் நடைமுறைக்கு வருகிறது. இவ்வாறான அமைப்பில் அமையும்போது, குரு கிரகம் அளவற்ற வலிமை பெற்று, தனது சுப பலன்களைப் பன்மடங்கு பெருக்குகிறது.

### மேஷம்

மேஷ ராசியில் பிறந்தவர்களுக்கு, குருவின் பெயர்ச்சியானது நான்காம் வீட்டில் நிகழவிருக்கிறது—இது மரபுரீதியாக சுகபோகங்கள் மற்றும் சொத்துக்களுடன் தொடர்புடைய ஒரு இடமாகும். 'ஹம்ச மகா புருஷ ராஜயோகத்தின்' தாக்கத்தினால், வீடு மற்றும் குடும்பத்திற்குள் மகிழ்ச்சி பெருகும் வாய்ப்புள்ளது; வாகனம் அல்லது அசையாச் சொத்துக்களை வாங்குவதற்கான வாய்ப்புகள் உருவாகலாம்; மேலும், தாயாரின் ஆதரவும் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மன அமைதியுடன் சேர்த்து, ஒருவிதமான ஸ்திரத்தன்மையும் உங்கள் வாழ்வில் குடிபுகும்; அத்துடன், உங்கள் குடும்பச் சூழல் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### ரிஷபம்

ரிஷப ராசியினருக்கு, குரு பகவான் மூன்றாம் வீட்டில் சஞ்சரிக்கிறார். இந்த வீடு தைரியம், வீரம் மற்றும் தகவல் தொடர்பு ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும். இந்த கிரக அமைப்பின் தாக்கத்தால், உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்; புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கக்கூடும் என்பதோடு, இளைய சகோதரர்களிடமிருந்து ஆதரவு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது. உங்கள் தொழில் வாழ்க்கையில் முன்னேற்றம் காண, புதிய முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கான துணிவை நீங்கள் பெறுவீர்கள்.

### மிதுனம்

மிதுன ராசியினருக்கு, குரு பகவான் தற்போது இரண்டாம் வீடான தன மற்றும் வாக்கு ஸ்தானத்தின் வழியாகப் பெயர்ச்சி ஆகிறார். 'ஹம்ச மகா புருஷ ராஜயோகத்தின்' தாக்கத்தினால், உங்கள் நிதி நிலைமை வலுப்பெறுவதற்கான வலுவான அறிகுறிகள் தென்படுகின்றன. மேலும், செல்வத்தைச் சேர்ப்பதற்கான புதிய வாய்ப்புகள் உருவாகக்கூடும்; அத்துடன், குடும்பத்திற்குள் நல்லிணக்கமும் அமைதியும் நிலவ வாய்ப்புள்ளது. உங்கள் பேச்சுத்திறன் மேலும் செழுமையாகவும், பிறரை ஈர்க்கும் வகையிலும் அமையும்; இது உங்கள் சமூக மற்றும் தொழில்சார் ஆகிய இரு துறைகளிலும் உங்களுக்குப் பலன்களைப் பெற்றுத் தரும்.

### கடகம்

கடக ராசியினருக்கு, குருவின் பெயர்ச்சியானது முதல் வீட்டில்—லக்னம் என்றும் அழைக்கப்படும் இடத்தில்—நிகழ்கிறது; இந்த *ராஜயோகத்திற்கு* இதுவே மிகவும் வலிமையான அமைப்பாகக் கருதப்படுகிறது. இதன் விளைவாக, இக்காலகட்டத்தில் உங்கள் ஆளுமையில் மேம்பாட்டை உணரக்கூடும். மேலும், உங்கள் தன்னம்பிக்கை உயர வாய்ப்புள்ளது; அத்துடன், வாழ்வில் குறிப்பிடத்தக்க வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். சமூகத்தில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரக்கூடும்; மேலும், முடிவெடுக்கும் உங்கள் திறன்களும் வலுப்பெறும்.

### சிம்மம்

சிம்ம ராசியினருக்கு, குரு பகவான் பன்னிரண்டாம் வீட்டில் சஞ்சரிக்கிறார். இக்காலகட்டத்தில் செலவுகள் அதிகரிக்கக்கூடும்; இருப்பினும், 'ஹம்ச மகா புருஷ ராஜயோகம்' அமைவதால் ஆன்மீக வளர்ச்சி ஏற்படும்; மேலும், நீங்கள் வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொள்ளக்கூடும். அதுமட்டுமின்றி, உங்கள் வாழ்வில் சுய சிந்தனையும் மன அமைதியும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### கன்னி

கன்னி ராசியினருக்கு, குரு பகவான் பதினொன்றாம் வீட்டின் (லாபம் மற்றும் வருமானத்திற்கான வீடு) வழியாகப் பெயர்ச்சி ஆகிறார். இதன் விளைவாக, இந்த 'ராஜ யோகத்தின்' தாக்கத்தால், புதிய வருமான வழிகள் உருவாகும்; உங்கள் விருப்பங்கள் ஈடேறும் என்பதோடு, நண்பர்கள் மற்றும் தொழில்சார் தொடர்புகள் வாயிலாகவும் உங்களுக்கு நன்மைகள் கிட்டக்கூடும். மேலும், தொழில் முன்னேற்றத்திற்கும் நிதி நிலைத்தன்மைக்கும் வழிவகுக்கும் புதிய வாய்ப்புகள் உருவாகவுள்ளன.

### துலாம்

துலாம் ராசியினருக்கு, குருவின் பெயர்ச்சியானது பத்தாம் வீடான 'கர்ம ஸ்தானத்தில்' நிகழ்கிறது. இந்த அமைப்பானது 'ஹம்ச மகா புருஷ ராஜ யோகத்தை' மிகச்சிறந்த வலிமை கொண்டதாக மாற்றுகிறது. இதன் விளைவாக, இக்காலகட்டத்தில் தொழில் முன்னேற்றம், பதவி உயர்வுகள் மற்றும் புதிய பொறுப்புகளை பெறலாம். மேலும், சமூக அந்தஸ்து உயர்வதற்கான வலுவான அறிகுறிகள் தென்படும்; அத்துடன், தொழில்சார் வட்டத்தில் ஒருவரின் நிலைப்பாடு கணிசமாக வலுப்பெறவும் உள்ளது.

### விருச்சிகம்

விருச்சிக ராசிக்கு, குரு பகவான் ஒன்பதாம் வீடான அதிர்ஷ்டம் மற்றும் ஆன்மீக ஸ்தானத்தின் வழியாகப் பெயர்ச்சி ஆகிறார். இந்த கிரக அமைப்பானது, நல்வாய்ப்புகளின் ஆதரவையும், சமயச் செயல்பாடுகளில் அதிகரித்த ஈடுபாட்டையும், நீண்ட தூரப் பயணங்களுக்கான வாய்ப்புகளையும் உங்களுக்குக் கொண்டு வரக்கூடும். மேலும், இக்காலகட்டம் உங்கள் வாழ்வில் நேர்மறையான மாற்றங்களையும், உரிய வழிகாட்டுதலையும் வழங்கும்.

### தனுசு

தனுசு ராசிக்கு, குரு பகவான் எட்டாம் வீட்டில் சஞ்சரிக்கிறார். 'ஹம்ச மகா புருஷ ராஜயோகத்தின்' தாக்கத்தால், திடீர் நிதி ஆதாயங்கள் ஏற்படும். மேலும், மறைஞானம் மற்றும் ஆராய்ச்சியில் ஆர்வம் அதிகரிக்கக்கூடும்; இருப்பினும், இதில் சில ஏற்ற இறக்கங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமையுடனும் விவேகத்துடனும் செயல்படுவது உங்களுக்கு நற்பயன்களைத் தரும்.

### மகரம்

மகர ராசியினருக்கு, குரு பகவான் ஏழாம் வீட்டில் சஞ்சரிக்கிறார்—இந்த ஏழாம் வீடே திருமணம் மற்றும் கூட்டாண்மைகளை நிர்வகிக்கும் இடமாகும். *ஹம்ச மகா புருஷ ராஜயோகத்திற்கு*, ஏழாம் வீடு மிகுந்த வலிமை வாய்ந்த ஒரு நிலையாகக் கருதப்படுகிறது. இதன் விளைவாக, திருமண வாழ்வில் இணக்கமும் இனிமையும் அதிகரிக்கும். மேலும், தொழில் கூட்டாண்மைகள் மூலம் ஆதாயங்கள் கிடைப்பதற்கும், சமூகத் தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

### கும்பம்

கும்ப ராசியினருக்கு, குரு பகவான் ஆறாம் வீட்டில் சஞ்சரிக்கிறார். இந்த கிரக அமைப்பின் தாக்கத்தால், உங்கள் எதிரிகள் மீது நீங்கள் வெற்றி பெறக்கூடும். மேலும், போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன; பணியிடத்தில் உங்கள் நிலை வலுப்பெறவும் வாய்ப்புள்ளது. இருப்பினும், உங்கள் உடல்நலம் சார்ந்த விஷயங்களில் எச்சரிக்கை அவசியம்.

### மீனம்

மீன ராசியினருக்கு, குரு பகவான் ஐந்தாம் வீட்டில் சஞ்சரிக்கிறார். இந்த வீடு கல்வி, குழந்தைகள் மற்றும் காதல் ஆகியவற்றை குறிக்கிறது. *ஹம்ச மகா புருஷ ராஜயோகத்தின்* தாக்கத்தால், இம்மூல ராசியினர் கல்வியில் வெற்றியையும், குழந்தைகள் வாயிலாக மகிழ்ச்சியையும், ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் முன்னேற்றத்தையும் அடையக்கூடும். காதல் உறவுகளும் வலுப்பெறும் வாய்ப்புள்ளது.



## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## இளைஞர்களிடையே ஏற்படும் திடீர் மாரடைப்பு மரணங்கள்..! பின்னணி!!



இதயத் தமனிகளில் கொழுப்பு அல்லது கொலஸ்ட்ரால் படிவதால், ரத்த ஓட்டம் சீராக நடைபெறுவதில்லை. இதயத்திற்குப் போதுமான இரத்தம் மற்றும் ஆக்ஸிஜன் கிடைக்காததால், இது மாரடைப்பு ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது. மருத்துவத் துறையில், இந்நிலை 'கரோனரி தமனி நோய்' (Coronary Artery Disease) என்று அழைக்கப்படுகிறது. இருப்பினும், இதயத்தில் ஏற்படும் இந்த அடைப்பு திடீரென்று உருவாவதில்லை; நீண்டகால உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறையின் காரணமாகவே இது ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினையின் அறிகுறிகள் வெகு காலத்திற்கு முன்பே தென்பட்டாலும், பலர் அவற்றை அலட்சியப்படுத்தி, ஆபத்தின் விளிம்பிற்குச் செல்கின்றனர்.

**கரோனரி தமனி நோயின் அறிகுறிகள் யாவை?**

இதய அடைப்பின் மிகவும் பொதுவான அறிகுறி நெஞ்சு வலி ஆகும். நெஞ்சில் ஒருவித அழுத்தம் போன்ற வலி உணரப்படும். சில சமயங்களில், இந்த வலி இடது கை, தோள்பட்டை, கழுத்து ஆகியவற்றிலிருந்து தாடை வரை பரவக்கூடும். சிலர் சாதாரணமாக நடக்கும்போதேகூட மிகுந்த சோர்வை உணர்கின்றனர். இதயத்திற்குத் தேவையான அளவு இரத்தம் கிடைக்காததால், உடல் ஆக்ஸிஜன் பற்றாக்குறையைச் சந்திக்கிறது. இதனால், மிகக் குறைந்த அளவிலான உடல் உழைப்பின்போதேகூட மூச்சுத்திணறல் ஏற்பட்டு, சுவாசம் வேகமடைகிறது. மேலும், திடீரென ஏற்படும் தலைச்சுற்றல் மற்றும் காரணமின்றி வியர்த்தல் ஆகியவையும் இதயப் பிரச்சினைகளுக்கான அறிகுறிகளாக இருக்கலாம்.

**யாருக்கு அதிக ஆபத்து உள்ளது?**

மருத்துவர்களின் கூற்றுப்படி, இதய நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிக கொலஸ்ட்ரால் ஆகியவற்றுக்கான குடும்பப் பின்னணியைக் கொண்டவர்களுக்கு இந்த ஆபத்து அதிகம் உள்ளது. ஆக, இவை அனைத்தும் கரோனரி தமனி நோயின் அறிகுறிகளாகும். யாருக்கு அதிக ஆபத்து உள்ளது என்பதை இப்போது நாம் தெரிந்துகொண்டோம்; இனி, இதய நோய்களிலிருந்து விலகி இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்துகொள்வோம். ஆரோக்கியமான உணவு முறையைப் பின்பற்றுதல், தினமும் உடற்பயிற்சி செய்தல், மன அழுத்தத்தைக் குறைத்தல் மற்றும் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் ஆகியவை மிகவும் அவசியம் என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

## தொடர்ந்து உயர்ந்து வரும் தங்கம் விலை!



சென்னை, ஏப். 04–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 உயர்ந்து ரூ.1,11,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 உயர்ந்து ரூ.13,950–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.255–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## கிராமம் கிராமமாக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வரும் திமுக வேட்பாளர் மா.மதிவேந்தன்!



இராசிபுரம், ஏப். 04–

நான் பதவியேற்ற பிறகு கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்து விட்டேன் மறக்காமல் திமுகவிற்கு வாக்களியுங்கள் மக்களிடம் தீவிரவாக்கு சேகரிப்பில் மா.மதிவேந்தன். நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டு களத்தில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள அமைச்சர் மா.மதிவேந்தன் தனது சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வெண்ணந்தூர் ஒன்றியம் சுற்றி உள்ள கிராமங்களில் பிரச்சாரத்தை துவங்கினார்.

வெண்ணந்தூர் ஒன்றியத்தின் மூலக்காடு, போயர் தெரு, இந்திரா நகர், பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு மக்களிடம் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

## மதுரை திருப்பரங்குன்றம் சுப்ரமணியசுவாமி கோவில் தேரோட்டம் - போக்குவரத்து மாற்றம்!




மதுரை, ஏப். 04–

மதுரை மாநகர காவல்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது;–

மதுரை மாநகர் திருப்பரங்குன்றம் சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் திருக்கல்யாணம் மற்றும் தேரோட்டம் நிகழ்ச்சியை முன்னிட்டு, 04.04.2026 மற்றும் 05.04.2026 ஆகிய இரண்டு நாட்களுக்கு மாநகரில் தற்காலிக போக்குவரத்து மாற்றம்

திருநகரிலிருந்து மதுரை நகருக்குள் வரும் வாகனங்கள் கிரிவல பாதை மற்றும் திருப்பரங்குன்றம் மேம்பாலத்தில் செல்வதற்கு அனுமதி இல்லை. இவ்வாகனங்கள் அனைத்தும் GST Bypass Road சாலை வழியாக மூட்டா தோட்டம் சென்று நகருக்குள் செல்ல வேண்டும். மதுரை நகரிலிருந்து திருப்பரங்குன்றம் மேம்பாலம் வழியாக திருநகர் செல்வதற்கு எந்த வாகனத்திற்கும் அனுமதி இல்லை. இவ்வாகனங்கள் அனைத்தும் மூட்டா தோட்டத்திலிருந்து GST Bypass Road சாலை வழியாக திருநகர் செல்ல வேண்டும்.

திருநகரிலிருந்து திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் வாகனங்கள் அனைத்தும் பூங்கா பேருந்து நிறுத்தம் அருகிலுள்ள காலி இடத்திலும் திருப்பரங்குன்றம் தெப்பக்குளத்திலுள்ள கட்டண வாகன நிறுத்தத்திலும் .அவர்களது வாகனங்களை நிறுத்த வேண்டும்.

மதுரை நகரிலிருந்து திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் நான்கு சக்கர வாகனங்கள் அனைத்தும் ஒக்கலிக்கர் மண்டபம் அருகிலுள்ள தெப்பக்குளம் கட்டண வாகன நிறுத்தத்திலும் இருசக்கர வாகனங்கள் திருப்பரங்குன்றம் ஆர்ச்சிலிருந்து மயில் மண்டபம் வரை சாலையின் இருபுறங்களிலும் Single Parking –ஆக நிறுத்த வேண்டும்.

திருப்பரங்குன்றம் மயில் மண்டபத்திலிருந்து திருப்பரங்குன்றம் சன்னதி தெரு வரை, DC அலுவலகத்திலிருந்து லாலா கடை வரை மற்றும் நான்கு ரத வீதிகளிலும் எந்த ஒரு வாகனங்களும் நிறுத்துவதற்கு அனுமதி கிடையாது.

அவனியாபுரத்திலிருந்து திருக்கோவிலிற்கு வரும் பக்தர்களின் வாகனங்கள் அனைத்தும் சரவண பொய்கை வாகன நிறுத்தத்திலும் அதற்கு அருகில் உள்ள கட்டண வாகன நிறுத்தத்திலும் நிறுத்த வேண்டும்.

அவனியாபுரத்திலிருந்து திருப்பரங்குன்றம் சாலை வழியாக நிலையூர் மற்றும் திருநகர் செல்லக்கூடிய பொது போக்குவரத்து இலகுரக வாகனங்கள் அனைத்தும் KV பள்ளியின் வலது புறம் திரும்பி தியாகராஜர் பொறியியல் கல்லூரி சாலை வழியாக GST ரோடு சென்று செல்ல வேண்டும்.

மேற்படி சாலை வழியாக வரக்கூடிய கனரக வாகனங்கள் அனைத்தும் அவனியாபுரம் முத்துப்பட்டி திருப்பரங்குன்றம் சாலை சந்திப்பில் வலதுபுறம் திரும்பி அழகப்பன் நகர் ரெயில்வே கேட் வழியாக செல்ல வேண்டும்.

திருக்கோவிலுக்கு வரும் அரசு வாகனங்கள் அனைத்தும் அருணகிரி திருமண மண்டப வாகன நிறுத்தத்தில் நிறுத்த வேண்டும்.

மதுரை நகரிலிருந்து திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் இருசக்கர வாகனங்கள் அனைத்தும் திருப்பரங்குனறம் ஆர்ச் அருகிலுள்ள மேம்பாலத்திற்கு கீழ் நிறுத்த வேண்டும்.

ஹார்விப்பட்டி மற்றும் நிலையூரிலிருந்து திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் வாகனங்கள் அனைத்தும் நிலையூர் சந்திப்பு அருகிலுள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்தத்தில் நிறுத்த வேண்டும்.

மேற்கண்ட வாகன போக்குவரத்து மாற்றத்திற்கு பொதுமக்கள், பக்தர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கும்படி மதுரை மாநகர் காவல்துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏப்.1 முதல் டிஜிட்டல் பரிவர்த்தனையில் அமலுக்கு வந்த புதிய விதிகள் என்னென்ன?



புதுடெல்லி, ஏப். 04–

இந்தியாவில் டிஜிட்டல் பரிவர்த்தனை தற்போது பெருகிவிட்டது. சாதாரண பெட்டிக்கடை முதல் வணிக வளாகங்கள் வரை யுபிஐ பரிவர்த்தனை செய்யப்படுவதை பார்க்க முடிகிறது. முன்பெல்லாம் கடை வீதிக்கு போனால் பர்ஸ் நிறைய பணம் வைத்துகொண்டு செல்ல வேண்டியிருக்கும். ஆனால், தற்போது கையில் ஒரு பைசா ரொக்கமாக இல்லாமல் காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை எங்கு வேண்டுமானாலும் சென்று வர முடியும் அளவிற்கு டிஜிட்டல் பரிவர்த்தனை அசுர வளர்ச்சி பெருகிவிட்டது.டிஜிட்டல்பரிவர்த்தனை பெருகிவிட்ட அதேவேளையில் , பல மோசடிகளும் அதைவைத்து நடைபெறுவதை பார்க்க முடிகிறது. இதையடுத்து மோசடிகளை கட்டுப்படுத்தும் விதமாக ரிசர்வ் வங்கி கடுமையான விதிகளை கொண்டு வந்துள்ளது. கடந்த 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்த விதிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு;

* யுபி.ஐ., கார்டு, மொபைல் வாலெட் போன்ற அனைத்து டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கும் இரண்டு நிலை உறுதிப்படுத்துதல் என்பது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒடிபி மட்டுமின்றி பின் நம்பர், கடவுச்சொல் அல்லது பயோமெட்ரிக் போன்ற கூடுதல் சரிபார்ப்பு தேவைப்படும். இதனால் பரிவர்த்தனை சற்று நேரம் எடுத்துக்கொண்டாலும், மோசடிகளை தடுக்க அதிக பாதுகாப்பு கிடைக்கும்.

*குறைந்த தொகை கொண்ட பரிவர்த்தனைகள் எளிதாக செய்ய முடியும். எனினும், பெரிய தொகை அல்லது புதிய சாதனங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு கூடுதல் பாதுகாப்பு சோதனைகள் இருக்கும்.

*பாதுகாப்பு குறைபாடுகள் காரணமாக மோசடி நடந்தால், வங்கிகள் மற்றும் பணப்பரிவர்த்தனை நிறுவனங்கள் பயனர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டிய சூழல் உருவாகிறது. இதன் மூலம் புகார்களுக்கு விரைவான தீர்வு கிடைக்கும்.

*இனி ஒரு நாளில் 50 முறை மட்டுமே பேலன்ஸ் சரிபார்க்க முடியும். இ.எம்.ஐ., சந்தா போன்ற தானியங்கி பணப்பரிவர்த்தனைகள் இனி இரவு 9.30 மணி முதல் காலை 10 மணிக்கு முன்பாக நடந்து விடும்.

## கேட்காமலேயே கிடைத்த சீட்; ராமதாஸ் வேட்பாளர்கள் புலம்பல்!

சென்னை, ஏப். 04–

பா. ம.க., தலைவர் அன்புமணி, அ.தி.மு.க., கூட்ட ணியில் இணைந்துள்ளதால், தி.மு.க., – அ.தி.மு.க., போன்ற பிரதான கூட்டணியில் சேர முடியாத நிலை ராமதாசுக்கு ஏற்பட்டது. இதனால், சசிகலாவின், அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் கட்சியுடன், ராமதாஸ் கூட்டணி வைத்துள்ளார். இருவரும் தொகுதிப் பங்கீட்டை அறிவிக்கவில்லை. ஆனால், வேட்பாளர்க ளை அறிவித்து வருகின்றனர். ஐந்து கட்டங்களாக இதுவரை, 35 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை, ராமதாஸ் அறிவித்துள்ளார். அன்புமணியின் மனைவி சவுமியா போட்டியிடும் தர்மபுரி உட்பட, பா.ம.க., போட்டியிடும் 10 தொகுதி களுக்கு, ராமதாசும் தனியாக வேட்பாளர்களை அறிவித்து ள்ளார். ராமதாஸ் அறிவி த்துள்ள 35 வேட்பாளர்களில் பெரும்பாலோர், தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவிக்கவில்லை என்றும், அவர்களிடம் கேட்காமலேயே அறிவிக்கப்பட்டு விட்டதாகவும் புலம்பி வருகின்றனர். இது தொடர்பாக, ராமதாஸ் அறிவித்த வேட்பாளர் ஒருவரிடம் கேட்டபோது, 'வேட்பாளர் பட்டியல் வெளியான பிறகு தான், நான் வேட்பாளர் என்பதையே தெரிந்து கொண்டேன். போட்டியிட விருப்பம் இல்லை. ஆனாலும், ராமதாஸ் மனம் கஷ்டப்படும் என்பதால், அவரிடம் சொல்லவும் முடியவில்லை. ஆனால், சிலர் போட்டியிட விரும்பவில்லை என அவரிடம் சொல்லி யதால், வேட்பாளர்களை மாற்றியுள்ளார்' என்றார்.

## சமையல் கியாஸ் தட்டுப்பாடு.. பீதியில் வாடிக்கையாளர்கள்- இந்தியன் ஆயில் நிறுவனம் விளக்கம்!



புதுடெல்லி, ஏப். 04–

இந்தியன் ஆயில் வெளியிட்டுள்ள அறிக்கையில், "உலகளாவிய எரிசக்தி சந்தைகளில் நிலவும் அரசியல் பதற்றங்கள் இருந்தாலும், இந்தியாவின் சமையல் கியாஸ் வினியோகம் நிலையாகவும் போதுமானதாகவும் உள்ளது. இது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு வினியோகம் உயர்ந்த முன்னுரிமையுடன் நடைபெறுகிறது. தற்போது தினமும் 28 லட்சம் கியாஸ் சிலிண்டர்கள் வினியோகிக்கப்படுகின்றன. இது தற்போதைய பதற்றங்களுக்கு முன்பிருந்த சாதாரண அளவுடன் ஒத்ததாகும். வீடுகளுக்கு தடையற்ற வினியோகம் நடைபெற்று வருகிறது" எனப்பட்டுள்ளது.

சமையல் கியாஸ் வினியோகஸ்தர்களிடையே நடைபெறும் கள்ளச்சந்தை மற்றும் குவிப்பு தடுப்பதற்காக பல்வேறு துறைகளை சேர்ந்த குழுக்கள் திடீர் சோதனைகள் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை நாடு முழுவதும் 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டு 141 டீலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும். 855 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 48 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டில் கியாஸ் தட்டுப்பாடு இல்லை எனவும் வாடிக்கையாளர்கள் பீதியால் முன்பதிவு செய்யவோ, சிலிண்டர்களை சேமித்து வைக்கவோ வேண்டாம். வினியோக நிலையங்களில் வரிசையில் நிற்க தேவையில்லை. வதந்திகளை நம்பாமல், அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே நம்புங்கள் என்று நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

**மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது**

சென்னை

Ph: 98659 88881

## வேலை வாய்ப்பு

## ITI முடித்தவர்களுக்கு கடற்படையில் வேலை..!

கடற்படை கப்பல் பழுதுபார்க்கும் தளம் மற்றும் கடற்படை விமானத் தளங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின் படி, மொத்தம் 240 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன

காலிப்பணியிடங்கள்: பிட்டர் (Fitter) பிரிவில் 31 இடங்கள், கம்ப்யூட்டர் ஆபரேட்டர் பிரிவில் 21 இடங்கள், எலக்ட்ரீசியன் (Electrician) பிரிவில் 29 இடங்கள், எலக்ட்ரானிக் மெக்கானிக் (Electronic Mechanic) பிரிவில் 18 இடங்கள், இன்ஸ்ட்ருமென்ட் பிரிவில் 15 இடங்கள், வெல்டர் (Welder) பிரிவில் 14 இடங்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்துறை பிரிவுகள் அடங்குகின்றன.

கல்வித்தகுதி: விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் கட்டாயமாக ஐ.டி.ஐ. (ITI) தகுதி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: விண்ணப்பதாரர்களின் வயது 01.06.2026 தேதியின்படி குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 60 வயதுக்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: தகுதியான விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படி விண்ணப்பிப்பது? விண்ணப்பிக்க விரும்புவோர் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இருந்து விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, முழுமையாக பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். இந்த வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிக்க கடைசி தேதி 17.04.2026 என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுப்ப வேண்டிய முகவரி: "The Admiral Superintendent (for Officer–in–Charge ATS), Apprentices Training School, Naval Ship Repair Yard, Naval Base, Kochi 682 004.


## மொடக்குறிச்சி பாஜக வேட்பாளர் கிருத்திகா சிவகுமார்!



மொடக்குறிச்சி, ஏப். 04–

மொடக்குறிச்சி தேசிய ஜனநாயக கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சி சார்பாக எஸ். கிருத்திகா சிவக்குமார் போட்டியிடுகிறார். 40 வயதாகும் இவர் பி.இ. எம்பிஏ. பட்டதாரி ஆவார். இவரது கணவர் சிவக்குமார் எம்பிபிஎஸ் டாக்டராக உள்ளார். இவர்களுக்கு ஆரியன், அர்ஜூன். என இரண்டு மகன்கள் உள்ளனர். இவரது மாமனார் சின்னுசாமி டாக்டராக பணிபுரிந்து வருகிறார். இவரது மாமியார் டாக்டர் சி.கே.சரஸ்வதி தற்போதைய மொடக்குறிச்சி எம்எல்ஏ ஆவார்.

தற்போதைய முகவரி: அக்ஷரம், காந்திபுரம், வெள்ளிவலசு ரோடு, அட்டவணை அனுமன்பள்ளி அஞ்சல், மொடக்குறிச்சி தாலுகா, ஈரோடு– 638101. இவர் சத்யபாமா பல்கலையில் இளநிலை பொறியியல் பட்டதாரி ஜிஆர்ஜி ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மென்ட் ஸ்டெடிஸ் எம்பிஏ கல்வித் தத்துவத்தில் நிபுணத்துவம் பெற்றவர் ஈரோடு, சேலம், திருச்சி இந்தியன் பப்ளிக் ஸ்கூல் செயல் இயக்குநர். அறம் அறக்கட்டளையின் அறங்காவலர் சிஐஐ இந்திய மகளிர் அமைப்பின் தலைவர் பாஜகவின் என்ஜிஓ பிரிவு மாநில செயலாளர் வேட்பாளர் கிருத்திகா சிவகுமார், வலுவான கல்விப் பின்னணியையும், கல்விச் சிறப்பு மற்றும் சமூக சேவையின் மீது ஆழ்ந்த அர்ப்பணிப்பையும் கொண்ட திறமையான கல்வியாளர், நிர்வாகி மற்றும் சமூகத் தலைவர். கல்வி மற்றும் சமூக முன்னெடுப்புகளில் தனது தலைமையின் மூலம், வருங்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கும் சமூகத்தை மேம்படுத்துவதற்கும் தீவிரமாக பணியாற்றி வருகிறார். மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதில் சிறப்பு கவனம் செலுத்துவதாக உறுதிமொழி அளித்துள்ளார்.



## சினிமா துளிகள்..!

## 'TN 2026' விஜய்க்கு எதிரான திரைப்படமா?




இயக்குநர் உமாபதி ராமையா இயக்கத்தில் நடராஜ் நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் "TN 2026". இந்தப் படத்தின் கதையை நடிகர் தம்பி ராமையா எழுத, படத்தை அவரது மகன் இயக்கியுள்ளார்.

தம்பி ராமையா, எம்.எஸ். பாஸ்கர் முக்கிய கத்பாத்திரங்களில் நடித்துள்ளனர். 'TN 2026 தங்க நட்சத்திரம்' திரைப்படம் வரும் ஏப்ரல் 10ம் தேதி வெளியாகிறது.

இந்தப் படத்தின் டீசர் வெளியிடப்பட்டது. இந்தப் படத்தின் டீசர் காட்சிகள் நடிகர் விஜயின் அரசியல் வருகையை குறிப்பதாகவும், இந்தப் படம் விஜய்க்கு எதிராக எடுக்கப்பட்டு இருப்பதாகவும் சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகி வந்தன. இந்த நிலையில், படத்தின் செய்தியாளர் சந்திப்பு சென்னையில் நடந்தது. இதில் படக்குழுவினர் கலந்து கொண்டு செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தனர். அப்போது பேசிய படத்தின் இயக்குநர் உமாபதி ராமையா, "இது யாருக்கும் எதிரான திரைப்படம் இல்லை. நாங்கள் அவமதிப்பதாக சொல்லப்படும் நபர் ஒரு சிங்கம். சிங்கத்தை யாராவது அவமதிக்க முடியுமா? இதை வெறும் படமாக மட்டும் பாருங்கள், அரசியலாக்காதீர்கள்," என்று தெரிவித்தார்.





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## பரபரப்பாகும் தேர்தல் களம்: தலைவர்கள் எங்கெங்கு பிரசாரம்..?



சென்னை, ஏப். 04–

தலைவர்கள் ஏப். 04–ல் பிரசாரம் செய்யும் தொகுதிகள்:– முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின்:– காலை 9 மணி–நாகர்கோவில், மாலை 5 மணி– சங்கரன்கோவில்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி:– மதியம் 3 மணி– ஆரணி, மாலை 5 மணி– விழுப்புரம்.

தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி.– காலை 11 மணி– மணப்பாறை, மாலை 4 மணி– ஸ்ரீரங்கம், மாலை 6 மணி– குளித்தலை, இரவு 8 மணி – கிருஷ்ணராயபுரம்.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்:– காலை 9 மணி– சித்தலவாய், காலை 10 மணி– குளித்தலை,மாலை 6.30 மணி– திண்டிவனம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் சண்முகம்:– கடலூர்

இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் வீரபாண்டியன்:–சென்னை

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ்:– இரவு 7 மணி– அம்பத்தூர், இரவு 9 மணி– பெரம்பூர் தொகுதியில் உள்ள கொடுங்கையூர்.

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்:–மாலை 4 மணி– போளூர்.

த.வெ.க. தலைவர் விஜய்:– புதுச்சேரி

## “தி.மு.க.வை 7வது முறையாக ஆட்சியில் அமர்த்த நீங்கள் ரெடியா..?” – தேர்தல் பிரச்சாரத்தில் மு.க.ஸ்டாலின்!



நாகர்கோவில், ஏப். 04–

இன்று (சனிக்கிழமை) காலை தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் பிரசார பொதுக்கூட்டம் கர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு குமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், கன்னியாகுமரி தொகுதி தி.மு.க. வேட்பாளருமான மகேஷ், நாகர்கோவில் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஆஸ்டின் மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை அறிமுகம் செய்து, அவர்களுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்தார்.

இதற்காக நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் பிரமாண்டமான பொதுக்கூட்டமேடை அமைக்கப்பட்டிருந்தது. கூட்டத்தில் தி.மு.க., காங்கிரஸ், தே.மு.தி.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட பல்வேறு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் தேர்தல் பிரசாரத்தின்போது முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:–

அன்பான வரவேற்பால் என்னை திக்குமுக்காட வைத்தது குமரி மக்கள்தான். இப்போது திரும்பவும் வந்துள்ளேன். சூரிய உதயத்தை பார்க்க மக்கள் வரும் மாவட்டம்தான் குமரி. அப்படிப்பட்ட குமரியில் உதயசூரியனுக்காக வாக்கு சேகரிக்க வந்துள்ளேன்.

திமுகவை 7வது முறையாக ஆட்சியில் அமர்த்த நீங்கள் ரெடியா; திராவிட மாடல் 2.0வுக்கு ரெடியா?.. திராவிட மாடல் அரசின் சாதனைகளை பட்டியலிட வேண்டும் என்றால் இன்றைய ஒரு நாள் போதாது. மீன் பிடி தடைக்கால மாத நிவாரணத் தொகையாக ரூ.12,000 வழங்கப்படும். மீன்கள் குறைவான காலகட்டத்தில் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.9000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கைக்கான வயது வரம்பு 70 ஆக அதிகரிக்கப்படும். மீனவர்கள் பிரச்னையில் ஒன்றிய அரசின் வெளியுறவுக் கொள்கை தோல்விடைந்துள்ளது. சிறிய நாடுகள் கூட நம்மை அச்சுறுத்தும் வகையில் நமது வெளியுறவுக் கொள்கையை மத்திய அரசு வைத்துள்ளது

மன்மோகன் சிங்கை பலவீனமான பிரதமர் என விமர்சித்த பிரதமர் மோடி, மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதலை தடுக்காத பிரதமர் மோடி, தான் ஒரு பலவீனமான பிரதமர் என்பதை ஏற்பாரா? மாட்டாரா?

அதிமுக பொதுச்செயலாளர் என்ற பெயர்ப் பலகையை காப்பாற்றிக் கொள்ள அவர் டெல்லிக்கு காவடி தூக்குகிறார். அதிமுக பாஜகவின் கொத்தடிமை கூட்டமாக மாறிப் போயுள்ளது. தன் பதவியை காப்பாற்றிக் கொள்ள சுயநலத்திற்காக இப்படி ஒரு நிலைமையில் அதிமுகவை கொண்டு வந்து நிறுத்தியுள்ளார்.

மதவெறிப் பார்வையோடு மனிதநேய செயல்பாடு மீது தொடுக்கும் தாக்குதல் மனித குலத்திற்கு எதிரானது. இதில் அ.தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன என்பதை எடப்பாடி பழனிசாமி சொல்வாரா?..அதை ஆதரிக்கிறாரா?

இஸ்லாமிய மக்களைப் போலவே கிறிஸ்தவ மக்களுக்கும் துரோகம் செய்யப்போகிறீர்களா பழனிசாமி?.. தன் சுயநலத்திற்காக, பதவியை காப்பாற்ற இந்த நிலையில் நிறுத்தியதாக அ.தி.மு.க.வினர் புலம்புகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.



வல்லரசு பள்வர்ட் பிளாக் நிறுவனர் தலைவர் P.N.அம்மாவாசிதேவர், மதுரை வடக்கு மாவட்ட திமுக வேட்பாளர் கோ. தனபதியை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

## வேட்பாளர் பட்டியலில் ஏன் பெயர் இல்லை..? - பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை விளக்கம்!



சென்னை, ஏப். 04–

பா.ஜ.க.வேட்பாளர் பட்டியலில் ஏன் பெயர் இல்லை..? என்று அண்ணாமலையிடம் சென்னை விமானநிலையத்தில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் பதிலளிக்கையில், “தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என தலைமைக்கு ஏற்கனவே எழுத்துப்பூர்வமாக தெரிவித்துவிட்டேன். மாநிலத்தின் கோர் கமிட்டியில் என்னுடைய கருத்தை இந்த தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்று சொல்லி இருந்தேன். கோர் கமிட்டியில் இருந்து தலைமைக்கு போன பட்டியலில் என் பெயர் கிடையாது. பியூஷ் கோயலிடமும் ஒரு வாரத்திற்கு முன்பு தேர்தலில் போட்டியிடவில்லை என்ற கருத்தை தெரிவித்து இருந்தேன். கட்சி என்னுடைய கருத்துக்கு மதிப்பளித்து, என்னை பிரசாரத்திற்கு பயன்படுத்தி இருப்பது மகிழ்ச்சி தான்.

காரணம் இந்த தேர்தலை பொறுத்தவரை எல்லோருக்கும் பணி செய்கிறேன். தமிழகம் முழுவதும் பா.ஜ.க. வேட்பா ளர்கள் 27 பேர் உள்ளனர். தேசிய ஜனநாயக கட்சி வேட்பாளர்கள் எல்லோருக்கும் நான் பிரசாரம் செய்ய தயாராக இருக்கிறேன். ஒவ்வொரு ஊராக சென்று பிரசாரம் செய்கிறேன். கட்சியின் வேட்பாளர்களை வெற்றி பெற செய்வது என்னுடைய கடமையாக பார்க்கிறேன். எப்போதும் நான் வேட்பாளர் ரேசில் இல்லை.

எந்த தொகுதியையும் நான் கேட்கவில்லை. போட்டி போடவில்லை. நான் கேட்கவும் மாட்டேன். அது என்னுடைய பழக்கமும் கிடையாது. என்னுடைய வேலை ஏப்ரல் 21ம் தேதி வரை பிரசாரம் செய்வது, அதன் பிறகு மற்றவை குறித்து பேசுகிறேன். இந்த முறை என்னுடைய சண்டை தமிழகம் முழுவதும் பிரசாரம் மூலம் தான். 2024ல் நாடாளுமன்ற தேர்தலில் நான் போட்டியிட்ட போது, எனக்கு சிறிய வருத்தம் இருந்தது. நம்மை நம்பி நிறைய வேட்பாளர்களை போட்டி போட வைத்தோம். ஆனால் என்னால் அவர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய முடியவில்லை. அந்த மன குறையை 2026ம் ஆண்டு தேர்தலில் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

காலம் இருக்கிறது. காட்சிகள் மாற தான் போகிறது. நிறைய தேர்தல் வர தான் போகிறது. அன்று நாம் போட்டி போட்டு கொள்ளலாம். அதனால் நம்முடன் அன்போடு இருக்க கூடிய மக்கள் எப்பொழுதும் அன்போடு தான் இருப்பார்கள். இந்த தேர்தலில் நமது சண்டை என்பது தமிழகம் முழுவதும் போக வேண்டும். தி.மு.க.வின் தவறுகளை எடுத்து சொல்ல வேண்டும். அதற்கு நாம் வலிமையாக பேச வேண்டும். அது என்னுடைய பொறுப்பாக பார்க்கிறேன்” என்று அவர் கூறினார்.

## தேர்தல் நேரத்தில் பார்லிமெண்ட் கூட்டத்தொடர் ஏன்? சிதம்பரம் கேள்வி!



காரைக்குடி, ஏப். 04–

தேர்தல் நேரத்தில் பார்லி கூட்டத்தொடர் ஏன்? தேர்தல்கள் முடிந்த பிறகு, ஏப்ரல் 29ம் தேதி கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார். காரைக்குடியில் நிருபர்களிடம் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம் கூறியதாவது: பார்லிமென்ட்டில் இரு அவைகளிலும் ஏப்ரல் மாதம் 16, 17, 18 ஆகிய தேதிகளில் சிறப்பு கூட்டம் நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. பார்லிமென்ட் எம்பிக்களின் எண்ணிக்கையை 543லிருந்து 816 ஆக (50% உயர்வு) அதிகரிப்பது மற்றும் தொகுதிகளை மறுவரையறை செய்வது தொடர்பான மசோதாக்கள் கொண்டு வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கியமான 67 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேர்தல் பணிகளால் அவைக்கு வர முடியாத சூழலை உருவாக்கி, மசோதாக்களை நிறைவேற்ற அரசு முயல்வதாகக் கூறப்படுகிறது. தேர்தல்கள் முடிந்த பிறகு, ஏப்ரல் 29ம் தேதி கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று காங்கிரஸ் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் பார்லி கூட்டத்தொடர் ஏன்?

ஏப்ரல் 23, 29ம் ஆகிய தேதிகளில் தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்தில் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், கூட்டத்தைக் கூட்டுவது அரசியல் சதி. தொகுதி எண்ணிக்கை அதிகரிப்பால் தென் மாநிலங்களின் குரல் பார்லிமென்டில் மேலும் குறையும் என்ற அச்சம் உள்ளது. இந்த அவசர நடவடிக்கையை ஒரு அரசியல் சாசன மோசடி என்று காங்கிரஸ் கட்சி கடுமையாகக் கண்டித்துள்ளது. இவ்வாறு ப.சிதம்பரம் கூறினார்.

## திருப்பூரில் சீமான் மீது வழக்குப்பதிவு!



திருப்பூர், ஏப். 04–

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து நாம் தமிழர் கட் சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று முன்தினம் பிரசாரம் செய்தார். அவர் திருப்பூர் யூனியன் மில் ரோட்டில்நடந்த பொதுக்கூட்டத்தில் வேட்பாளர்களை அறிமுகம் செய்து பேசினார். அப்போது தேர்தல் விதிமுறைக்கு மாறாக இரவு 10 மணிக்கு மேலும் பொதுக்கூட்டத்தில் பேசியதாக தேர்தல் பறக்கும் படையினர் திருப்பூர் வடக்கு போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர்.

இதைத்தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக சீமான் மீது இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் வழக்குப்பதிவு செய்துள்ளார். இதேபோல் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களான தினேஷ் (திருப்பூர் தெற்கு), கார்மேகன் (காங்கயம்), தமிழினி யன் (பல்லடம்). ராம்குமார் (உடுமலை), திவ்யா (தாராபுரம்), அபிநயா (திருப்பூர் வடக்கு), ராதாமணி (மடத்துக்குளம்). மேனகா (அவினாசி) ஆகியோர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## எடப்பாடி பழனிசாமியால் வருகிற தேர்தலில் நிச்சயம் வெற்றி பெற முடியாது - கனிமொழி!





திண்டுக்கல், ஏப். 04–

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் தொகுதிகளில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து கனிமொழி எம்.பி. வாக்கு சேகரித்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது:– எதிரணியில் கூட்டணி உருவாக்கி இருக்கும் எடப்பாடி பழனிசாமி அடிக்கடி தனது நிலையை மாற்றி மாற்றி பேசக்கூடியவர். பா.ஜ.க.வுடன் இனி ஒருபோதும் கூட்டணி வைக்கமாட்டேன் என்று தெரிவித்தார். தற்போது அந்த அணியுடன் சுயலாபத்திற்காக கூட்டணி அமைத்துள்ளார்.

சி.ஏ.ஏ. சட்டம் மக்களவையில் அமல்படுத்தியபோது அதனை ஆதரித்து பேசினார். கிராமப்புற மக்களுக்கு வேலை உத்தரவாதம் அளித்து வந்த 100 நாள் வேலை திட்டத்தை மத்திய அரசு நீக்க முயற்சி எடுத்து வருகிறது.

டெல்லியில் அமர்ந்து கொண்டு தமிழ்நாட்டில் இருக்கும் கிராமத்தில் எந்த ஊரில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கலாம் என அவர்கள் முடிவு செய்ய உள்ளனர். இந்த திட்டத்தில் மாநில அரசுக்கு கொடுத்த நிதி குறைக்கப்பட்டு விட்டது. ஆனால் இதைப்பற்றி எல்லாம் எடப்பாடி பழனிசாமி பேசமாட்டார். தற்போது தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகத்தில் மோடியும், அமித்ஷாவும் சுற்றுலா பயணியை போல வந்து செல்கின்றனர். பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்த யாருக்கும் எதிர்காலம் இல்லை. அந்த அக்கறையில்தான் எடப்பாடி பழனிசாமிக்கு வருகிற தேர்தலில் எதிர்கட்சி வரிசையாவது கிடைக்குமா? என்பது சந்தேகமாக உள்ளது. தமிழகத்திற்கு துரோகம் செய்த அனைவரும் ஒரே கூட்டணியில் உள்ளனர். பழனிசாமி தமிழகத்திற்கு மட்டும் துரோகம் செய்தவர் இல்லை. தன்னை வளர்த்த கட்சிக்கும் துரோகம் செய்தவர்.

தன்னை பதவியில் அமர வைத்த சசிகலா, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரையும் கட்சியை விட்டு விலக்கியவர். எனவே எடப்பாடி பழனிசாமியால் வருகிற தேர்தலில் நிச்சயம் வெற்றி பெற முடியாது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும் 2–வது முறையாக ஆட்சி பொறுப்பில் அமரும்போது தி.மு.க.வால் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். இளைஞர்கள், பெண்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## திமுக மேல அப்டி என்ன கோபம்னு எங்களுக்கும் சொல்லுங்க விஜய்.. இயக்குனர் சேரன்!





சென்னை, ஏப். 04–

புதுசா கட்சி ஆரம்பிச்சு மக்கள்கிட்ட ஓட்டு கேட்க வந்தா மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கு அதை தனது கட்சி எப்படி தீர்க்கும், நாட்டில் என்ன என்ன மாற்றங்கள் கொண்டு வரலாம்.. அதற்கு தன்கிட்ட என்ன என்ன திட்டங்கள் இருக்குன்னு பேசனுமா இல்ல உங்களுக்கு ஸ்டாலின் வேணுமா இல்ல நான் வேணுமான்னு கேட்டா அந்த தகுதி போதுமா ஒரு நாட்டை ஆள.. உங்க இருவருக்கும் என்ன பிரச்சினைன்னு எங்களுக்கு தெரியல.. உங்க ரசிகர்களுக்கே தெரியாதுன்னு நினைக்கிறேன். அது என்ன எப்ப வந்தாலும் ரெண்டு கட்சிக்குத்தான் போட்டி.. அப்படி என்ன உங்களுக்கு திமுக மேல கோபம்னு எங்களுக்கும் சொல்லுங்க விஜய்... நாங்களும் சப்போர்ட் பன்றோம்.. சொல்லாம நீங்க மட்டும் சினிமா டயலாக் பேசுனா ஏன் ஓட்டு போடனும்னு மக்கள் கேக்குறாங்கல்ல.. இங்க ஐம்பது வருஷமா இருக்க கட்சிகள் மற்றும் பதினைந்து வருஷமா மக்களோட மக்களா களத்துல நின்னு போராடி, புதிய மாற்றத்தோடு தமிழகத்தை உருவாக்க மக்கள்கிட்ட வாக்கு சேகரிக்கும் கட்சிகள் எல்லாம் நிறைய இருக்கு.. எந்த விதத்துல நீங்க அந்த கட்சிகளை விட உயர்வு சொல்லுங்க...

எந்த போராட்டத்துல மக்களுக்காக மக்கள் கூட நின்னு இருக்கீங்க இங்க ரெண்டு கட்சிக்குத்தான் போட்டின்னு சொல்ல... மனசாட்சி இல்லைன்னா நீங்க எப்படி மக்கள் தலைவனா மாறுவிங்க விஜய்... உழைப்பை முதல்ல மதிங்க... உங்க கவர்ச்சி மட்டும் மக்களுக்கான அரசியல் இல்ல... இனிமேலும் மக்கள்கிட்ட வீரவசனம் மட்டும் பேசாம ஒழுங்கா உங்க கட்சியோட கொள்கை திட்டம் எல்லாம் எல்லா இடத்துலயும் பேசுங்க.. ஒவ்வொரு தொகுதிலயும் என்ன பிரச்சினைன்னு அலசி ஆராய்ங்க... பொதுவா வீராவசனம் பேச இது அரட்டை அரங்கம் இல்லை... மக்கள் களம்... ஏற்கனவே நாங்க 50 வருடத்தை இழந்துட்டு இருக்கோம்.. இப்போ நீங்க வந்து ஆட்டத்தை கலைக்காதிங்க.. மறுபடியும் மக்கள் பிரச்சினை உணராத முதல்வர் எங்களுக்கு வேண்டாம்.... மக்களோடு மக்களாக நின்று எங்களை, எங்கள் இளையதலைமுறையை வழிநடத்தும் தலைமையே எங்களுக்கு வேண்டும்”என்று பதிவிட்டுள்ளார்.

## 4-ம் கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார் சசிகலா!

சென்னை, ஏப். 04–

அ.இ.பு.த.ம.மு கழகத்தின் நான்காம் கட்ட வேட்பாளர் பட்டியலை சசிகலா வெளியிட்டார் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 2 தொகுதிகளில் வேட்பாளர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

1. பேராவூரணி (177)– திரு ரா.ரவி.
2. ஒட்டப்பிடாரம் (தனி) (217)– H.அமுதா, ஒன்றியக்குழு உறுப்பினர்
3. அருப்புக்கோட்டை (207)– பா. தர்மராஜ்
4. பரமத்தி–வேலூர் (95)– கே.ஆர். விஜய்சூர்யபாலாஜி
5. பல்லாவரம் (30)– ராஜ்குமார்
6. பொள்ளாச்சி (123)– மெய்குரு (எ) முருகவேல்
7. திரு.வி.க நகர் (தனி) (15)– சி.கிறிஸ்டி
8. கோவை வடக்கு (118)– கே. ராகுல்காந்தி
9. திருச்செந்தூர் (215)– P. கோபாலகிருஷ்ணன்.

மாற்றம் செய்யப்பட்டுள்ள புதிய வேட்பாளர்கள்:

1. விளாத்திகுளம்– செ.பொன்பாண்டி
2. உளுந்தூர்பேட்டை–இரா. உதயகுமார்

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020